# பந்திங் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் அரும் பணி

(பெ.சா.ஆறுமுகம்)

பந்திங், ஆக 6-

மலேசிய இந்தியர் உருமாற்றுத் திட்டத்தின் வழி கல்வி, விளையாட்டு, சமயம், சமூக நல உதவி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது பந்திங்கில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்.

அதன் அடிப்படையில் இவ்வாண்டு பிப்ரவரி மாதம் தொடங்கி கல்வி சார்ந்த நிகழ்வுகள் உட்பட விளையாட்டுப் பயிற்சிகள், பிரத்தியேக கல்வி ஆகியவை தொடர்ந்து நடைபெற்று வந்ததுடன் கோவிட்-19 நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைக்குப் பின்னர் அனைத்து நிகழ்வுகளும் நிறுத்தி வைக்கப் பட்டிருந்ததாக இவ்வாலயத்தின் செயலாளர் சேகரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகள் யாவும் மீண்டும் ஜூலை மாதம் 5 ஆம் தேதி முதல் மீண்டும் நடைபெற்று வருவதாகத் தெரிவித்த அவர் ஒவ்வொரு வியாழக்கிழமை இரவு 7.30 மணி முதல் 9.30 வரை ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிலம்ப வகுப்புகளும், வெள்ளிக் கிழமைகளில் இரவு 7.30 மணி முதல் 9.30 மணி வரை தேவார வகுப்பு, சனிக்கிழமையன்று காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை பிரத்தியேக வகுப்பு மற்றும் ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை யோகா பயிற்சியும் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக விளக்கமளித்தார்.

மலேசிய இந்தியர் உருமாற்றுத் திட்டத்தின் கீழ் (மித்ரா) நடைபெற்று வரும் இந்நிகழ்வுகள் யாவும் பூ பந்து பயிற்சியினை தவிர ஆலயத்தின் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இலவசமாக நடத்தப் பட்டுவரும் இப்பயிற்சிகளில் கலந்துகொள்வோருக்கு இலவச சிற்றுண்டியும் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் பிரத்தியேக கற்றல் கற்பித்தல் வகுப்பு மாணவர்களுக்கு சிற்றுண்டியும், மதிய உணவும் வழங்கப்பட்டு வருவதாக சேகரன் மேலும் தெரிவித்தார். இப்பயிற்சிகள் தொடர்பாக மேலும் விபரம் பெற கீழ்க் கண்ட எண்களுடன் தொடர்பு கொள்ளலாம்.





Akhbar : Malaysia Nanban
Tarikh : 6 Ogos 2020
Muka surat :
Sentiment : Neutral

Tajuk : **Program khas diadakan di Kuil Sri Sithi Vinayagar, Banting**

Ringkasan : Kuil Sri Sithi Vinayagar, Banting memberi tumpuan kepada program-program yang berasaskan pendidikan, sukan, keagamaan, dan bantuan kebajikan sosial yang diadakan oleh Unit Transformasi Masyarakat India (MITRA). Program-program sedemikian yang dimulakan pada awal bulan Februari tahun ini, telah ditangguhkan setelah Perintah Kawalan Pergerakan diarahkan, kata setiausaha jawatankuasa kuil, Encik Segaran. Beliau mengatakan bahawa semua aktiviti telah diadakan semula mulai 5 Julai 2020. Beliau juga mengalu-alukan orang ramai yang berminat untuk menyertai aktiviti-aktiviti yang diadakan. Berikut adalah aktiviti yang berlangsung di kuil :

| Hari | Aktiviti | Masa |
|---|---|---|
| Khamis | Kelas silambam | 7.30pm-9.30pm |
| Jumaat | Kelas agama | 7.30pm-9.30pm |
| Sabtu | Kelas istimewa | 8.00am-12.30pm |
| Ahad | Yoga | 10.00am-12.00pm |

Akhbar : Makkal Osai
Tarikh : 6 Ogos 2020
Muka surat :
Sentiment : Neutral

Tajuk : **Program khas MITRA di Kuil Sri Sithi Vinayagar, Banting**

Ringkasan : Kuil Sri Sithi Vinayagar, Banting memberi tumpuan kepada program-program yang berasaskan pendidikan, sukan, keagamaan, dan bantuan kebajikan sosial yang diadakan oleh Unit Transformasi Masyarakat India (MITRA). Program-program sedemikian yang dimulakan pada awal bulan Februari tahun ini, telah ditangguhkan setelah Perintah Kawalan Pergerakan diarahkan, kata setiausaha jawatankuasa kuil, Encik Segaran. Beliau mengatakan bahawa semua aktiviti telah diadakan semula mulai 5 Julai 2020. Beliau juga mengalu-alukan orang ramai yang berminat untuk menyertai aktiviti-aktiviti yang diadakan. Berikut adalah aktiviti yang berlangsung di kuil :

| Hari | Aktiviti | Masa |
|---|---|---|
| Khamis | Kelas silambam | 7.30pm-9.30pm |
| Jumaat | Kelas agama | 7.30pm-9.30pm |
| Sabtu | Kelas istimewa | 8.00am-12.30pm |
| Ahad | Yoga | 10.00am-12.00pm |

## பந்திங் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில்
# மலேசிய இந்தியர்
## உருமாற்றத் திட்ட நிகழ்ச்சிகள்

எம்.எஸ். மணியம்

பந்திங், ஆக. 6-
பந்திங் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மலேசிய இந்தியர் உருமாற்றத் திட்டத்தின் கீழ் சமூக, சமய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது என்று ஆலயச் செயலாளர் சேகரன் கூறினார்.

மித்ரா வழி கிடைக்கப்பெற்ற மானியத்தைக் கொண்டு சமயச் சேவைகளை கடந்த பிப்ரவரி தொடங்கி ஆலயம் மேற்கொண்டு வருகிறது.

எம்சிஓ காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்ட சேவை ஜூலை 5 தொடங்கி மீண்டும் தொடர்கிறது என்று அவர் சொன்னார்.

ஆலயத்தில் தற்போது வியாழக்கிழமை களில் இரவு 7.30 தொடங்கி 9.30 மணி வரை மாணவர்களுக்கு சிலம்ப வகுப்பு நடத்தப்படுகிறது.

வெள்ளிக்கிழமைகளில் இரவு 7.30 தொடங்கி இரவு 9.30 மணி வரை தேவார வகுப்பும் சனிக்கிழமைகளில் காலை 8.00 தொடங்கி நண்பகல் 12.30 மணி வரை கல்வி கற்றல் பிரத்தியேக வகுப்பும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.00 தொடங்கி நண்பகல் 12.00 மணி வரை யோகா வகுப்பும் நடத்தப்படுகிறது என்று அவர் கூறினார்.

ஆலயத்தின் கலாச்சார மண்டபத்தில் இந்தச் சேவை மேற்கொள்ளப்படுகிறது. மற்றொரு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 தொடக்கம் 11.00 மணி வரை மாணவர் கள் பூப்பந்துப் பயிற்சியை மேற்கொள்கின் றனர்.

மாணவர்களுக்கு இலவச சிற்றுண்டியும் அதே சமயம் சனிக்கிழமைகளில் பிரத்தியேக வகுப்பில் பங்கேற்கும் மாணவர்களுக்கு சிற்றுண்டியோடு மதிய உணவும் வழங்கப் படுகிறது.

பதினெட்டு வாரங்களுக்கு இந்நிகழ்ச்சிகள் தொடரும்.

தொடர்புக்கு: ஆலயத் தலைவர் செல்வமணி 010-2216142, சேகரன் 013-4564010.

